**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 05-09-2024 Starting Time : 12:40

SC. No. 77/2022 அ.சா. 2 - மணி

2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05ம் நாள் மணி என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திருமதி. சு. ஸ்ரீவித்யா, பி.காம். எம்.ஏ.பி.எல்., சார்பு நதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி | தந்தை பெயர் | ம.ராஜி |
| வயது | 53 | கிராமம் | சக்கிலிப்பட்டி |
| வட்டம் | அருர் | மாவட்டம் | தருமபுரி |

முதல் விசாரணை:-

நான் சக்கிலிப்பட்டி கிராமத்தில் குடும்பத்துடன் வசித்துக்கொண்டு டாஸ்மாக் கடையில் மேற்பார்வையாளரகா பணியாற்றிகிறேன். என்னுடைய நிரந்தர முகவரி தருமபுரி மாவட்டத்தில் உள்ளது. நான் டாஸ்மாக் கடை அருகிலேயே வாடகைக்கு வீடு எடுத்துக்கொண்டு தங்கி டாஸ்மாக்கிற்கு சென்று வந்தேன். என்னுடன் என்னுடைய மச்சான் கலைஞர் உதவியாளர் ஆவார். மாதப்பான் மற்றும் லட்சுமணன் ஆகிய இருவர்களும் விற்பனையாளர்கள். பார் சின்னசாமி பார் உதவியாளராக வேலை செய்கிறோம்.

கடந்த 14-08-2015 ம் தேதி மாதப்பன், லட்சுமணன், சின்னசாமி ஆகியோருக்கு வேலையில் ஓய்வு கொடுத்ததால் அன்றைய தினம் அவர்கள் ஓய்வில் இருந்தார்கள். அதே தேதியில் காலை 10.00 மணிக்கு நான் கடையை வியாபாரத்தை கவனித்துக்கொண்டிருந்தேன். அன்றைய தினம் வசூலான சுமார் ரூ. 2,00,000/- என்னுடைய பையில் எடுத்துக்கொண்டு அன்று இரவு 10.00 மணிக்கு கடையை பூட்டினேன். எங்களுடைய கடைக்கு 3 பூட்டுகள் உள்ளது. அதில் 3 பூட்டையும் பூட்டிவிட்டு 1 பூட்டுக்கு சீல் வைத்துவிட்டு கணக்கு புத்தகங்களை வெங்கட்டராமனிடம் கொடுத்துவிட்டு வசூலான தொகை உள்ள பையை என்னுடைய மச்சான் கலைஞரிடம் கொடுத்துவிட்டு 2வது பூட்டிற்கு சீல் வைத்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது என் கடையின் தெற்கு பகுதியிலிருந்து 3 நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். ஆஜர் எதிரிகளில் மஞ்சுநாத், த/பெ. ராமப்பா, மஞ்சுநாத் த/பெ. அஸ்வத்தப்பா ஆகிய இருவருடன் சேர்ந்த மற்றொரு நபர் தற்பொழுது ஆஜரில் இல்லை அவரும் அந்த இருசக்கர வாகனத்தில் வந்தார்கள்.

அஸ்வத்தப்பா மகன் மஞ்சுநாத்தும் தற்பொழுது நீதிமன்றத்திற்கு வராத மற்றொரு எதிரியும் இருசக்கர வாகனத்திலிருந்து இறங்கி வந்தாார்கள் வந்து என்னிடம் மதுபானம் கேட்டார்கள். அப்பொழுது நான் கடையை பூட்டி சீல் வைக்கப்பட்டுவிட்டது அதனால் மதுபானத்தை தற்பொழுது கொடுக்க முடியாது என்று கூறினேன். அடுத்த நாள் சுதந்திர தினம் என்பதால் கடையை சீல் வைக்கவேண்டிய விதி இருப்பதால் கடையை சீல் வைத்துவிட்டதாக கூறினேன். அப்போது ஆஜர் எதிரியான அஸ்வத்தப்பா மகன் மஞ்சுநாத் என் மச்சான் கையில் இருந்த வசூல் தொகை வைத்திருந்த தோளில் மாட்டியிருந்து பையை கத்தியைக் கொண்டு அறுத்து எடுத்து பையை பிடுங்கி கொண்டார்.

மாமா பையை பிடுங்கி கொண்டார்கள் என்று கலைஞர் சொன்னவுடன் நான் அந்த பையை பிடுங்குவதற்காக முயன்றபோது ஒரு 30 வயது மதிக்கத்தக்க ஒல்லியான தேகம் கொண்ட சுமார் 5 அடி உயரம் உள்ள ஒரு நபர் இரும்பு ராடால் என்னுடைய தலையில் ஓங்கி அடித்துவிட்டார். அதில் என்னுடைய மண்டை உடைந்து இரத்தம் வந்தது, மீண்டும் என்னை அடிக்க வந்தார். அப்பொழுது என்னுடைய இடது கையால் அதை நான் தடுத்தப்பொழுது என்னுடைய இடது பெருபவிரலின் மேல் அடிப்பட்டு உட்காயம் ஏற்பட்டுவிட்டது. நான் நிலைதடுமாறி கீழே விழுந்தபோது வலது முன்னங்கையில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. கீழே விழுந்த நான் மீண்டும்

எழுந்து அவர்களை பிடிக்க முற்பட்டப்போது அதே நபர் தாக்கியதில் என்னுடைய வலது தொடையில் அடிப்பட்டது. என்னுடைய மைத்துனர் கலைஞரும் வெங்கட்டராமனும் அந்த நபர்களை பிடிக்க முயன்ற போது ஆஜர் எதிரிகளான இரண்டு மஞ்சுநாத் ஆகியோர் இருவரும் கத்தியையும் ராடையும் காட்டி எங்களை பிடிக்க வந்தால் உங்களை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள். அதனால் கலைஞரும் வெங்கட்டராமனும் பயந்துக்கொண்டு கடைக்கு பின்புறம் ஓடிவிட்டார்கள். இந்த சம்பவம் நடந்தபோது நான் அய்யோ அய்யோ என்று கத்தியபோது அருகில் உள்ள கூட்டுறவு சொசைட்டியில் அங்கு வேலை செய்யக்கூடிய நரசிம்மா என்பவர் ஓடி வந்தார். அவர் என் அருகில் வருவதற்குள் ஆஜர் எதிரிகள் இருவரும் தங்களுடைய இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு மெயின் ரோடு சென்றுவிட்டார்கள். அப்பொழுது பக்கத்து கிராமத்தில் வேலை செய்யக்கூடிய டாஸ்மாக்கின் மேற்பார்வையாளர் பி. மனோகரனுக்கு நான் போன் மூலம் தகவல் கொடுத்தேன்.

அவர் வந்து 108 ஆம்புலன்சிற்கு போன் செய்தார். ஆம்புலன்ஸ் வந்தவுடன் என்னை ஒசூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சிகிச்சைக்கு சேர்த்தார். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த சமயத்தில் சூளகிரி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து நான் சொன்ன வாக்குமூலத்தை அவருடைய லேப்டாப் மூலம் பதிவு செய்தார். சிறிது நேரம் கழித்து அதிலிருந்த பிரிண்ட் அவுட் பேப்பரை என்னிடம் கொடுத்தார்கள். நான் அதை முழுவதுமாக படித்துபார்த்துவிட்டு என்னுடைய வாக்குமூலம் சரியாக இருந்ததால் அதில் நான் கையொப்பம் செய்தேன். எதிரிகள் எனக்கு எப்பொழுதும் அடையாளம் தெரியும். இரண்டு மாதங்கள் கழித்து சேலம் மத்திய சிறைசாலையில் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. அங்கு நான் ஆஜர் எதிரிகள் இரண்டு பேர் ஆஜரில் இல்லாத மற்றொரு எதிரியையும் நான் அடையாளம் காட்டினேன். அதை நீதிபதி பதிவு செய்துக்கொண்டார். அந்த அடையாள அணிவகுப்பில் 4, 5 முறை எதிரிகளை கலந்து நிற்க வைத்தும் ஆடைகளை மாற்றி நிற்கவைத்தும் அடையாளம் காட்டச்சொன்னார்கள் நான் அடையாளம் காட்டினேன். நான் ெ காடுத்து வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய தான் அது **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. தற்பொழுது நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படுத்துள்ள ராடு மற்றும் கத்தி ஆகியவைகளால் தான் பணப்பையை அறுக்கவும் எதிரிகள் பயன்படுத்தினார்கள். மேற்கண்ட இரண்டு சான்று பொருட்களும் **சா.பொ.ஆ.1 மற்றும் 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Ending Time : 13:10**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur